Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 313
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 7 ரம்ழான் 19 வெள்ளிக்கிழமை (22-12 67)

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தில் 'நெஸ்பிரே' தட்டுப்பாடு கிடையாது

## அதிக விலைகொடுத்து வாங்க பாவனையாளர் முயலவேண்டாம்

### உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

**"யாழ்ப்பாண மாவட்டத்தில் நெஸ்பிரே தட்டுப்பாடு கிடையாது. கடந்தமாதத்திலும் பார்க்க இம்மாதம் 40 ஆயிரம் றுத்தல் நெஸ்பிரே அதிகமாக இங்கு வழங்கப்பட்டுள்ளது. சில வியாபாரிகள் பால் உணவு வகைகளை பதுக்கிவைத்திருப்பதாலேயே பாவனையாளர்கள் நெஸ்பிரே பெற முடியாதிருக்கின்றனர். போதியளவு நெஸ்பிரே இருப்பதால், பாவனையாளர்கள் அதிக விலைகொடுத்து நெஸ்பிரே வாங்க முயற்சிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்"**

யாழ்ப்பாணம் உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். வீரசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் அறிவித்துள்ளதாவது:-

நெஸ்பிறே மட்டுமன்றி எவ்றிடே, லக்டஜன், நோமாட் பிலாகன், ஃகௌ அன் கேட், நெஸ்டேமோல்ட், போன்ற பால் உணவுகள் இம்மாதம் ஏராளமாக வந்துள்ளது. ஆதலால் யாழ்ப்பாணத்தில் பால் உணவிற்கு தட்டுப்பாடு ஏற்படவேண்டிய அவசியம்ஏற்படவில்லை.

கடந்த ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில், குழந்தைக் கூப்பனுக்கு நெஸ்பிறே விற்பனை செய்யப்பட்டது. சில வத்தகர்கள், நெஸ்பிறே டின்கள், ஏராளமாக விற்பனையாகாமல் கடைகளில் இருப்பதாக தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து கூப்பனில்லாமல் நெஸ்பிறே விற்கும்படி அவர்களுக்கு அனுமதி விழங்கப்பட்டது.

அரசாங்க உத்தரவைத் தொடர்ந்து இம்மாதம் கூப்பனில்லாமல், யாழ்ப்பாணத்தில் நெஸ்பிறே வழங்கப்பட்டது. இதனால் குழந்தைகளுக்கும், நோயாளர்களுக்கும் நெஸ்பிறே கிடையாமலிருப்பதாக பலர்புகார் செய்ததை தொடர்ந்து மீண்டும், யாழ்ப்பாணத்தில் குழந்தை கூப்பன்களுக்கும், பெர்மிட்டுக்குமே நெஸ்பிறே விற்பனை செய்யும்படி உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டுறவு யூனியன்களில் குழந்தை கூப்பன்களுக்கு மட்டுமே நெஸ்பிறே வழங்கப்படுகிறது.

### நோயாளருக்கு

யாழ்ப்பாணத்திலுள்ள நோயாளர்கள், உணவு கட்டுப்பாட்டு இலாகாவில், பெமிட் பெற்று நெஸ்பிறே வாங்கலாமென்றும் மற்றும் பகுதிகளில், காரியாதிகாரிகளிடம் பேர்மிட் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிய வருகிறது.

## 48,769 றுத்தல் நெஸ்பிரே இங்கு விநியோகிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம், யூனியன்களுக்கும், தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும், 48,769 றுத்தல் நெஸ்பிரே விநியோகிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 8,160 றுத்தல் நெஸ்பிறே மட்டுமே வழங்கப்பட்டது. கடந்த மாதத்திலும் பார்க்க இம்மாதம் 40,609 றுத்தல் நெஸ்பிறே அதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் யூனியன்களுக்கு, 25,735 றுத்தல் நெஸ்பிறேயும், தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு 23,034 றுத்தல் நெஸ்பிரேயும், யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கப் பட்டுள்ளது. யூனியன்களில் குழந்தை கூப்பன்களுக்கே நெஸ்பிரே பெற்றுக் கொள்ளலாம். தனிப்பட்ட வர்த்தக நிலையங்களிலும், இனிமேல் இம்முறை கையாளப்படவிருக்கிறது.

டிசம்பர் மாதம், தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு, 1872, பன்னிரண்டு அவுன்ஸ் 'எவறிடே' ரின்கள் வழங்கப் பட்டிருக்கின்றது. 296 3 றுத்தல், எவ்றிடே டின்களும், வழங்கப்பட்டிருக்கின்றது.

கடந்த ஜூன் மாதம்முதல் கூட்டுறவு யூனியனகளுக்கும், தனிப்பட்ட வத்தகர்களுக்கும் விநியோகிக்கப்பட்ட நெஸ்பிறே டின்களின் விபரங்கள் வருமாறு:

| | தனிப்பட்ட வர்த்தகர்கள் | யூனியன்கள் |
|---|---|---|
| ஜூன் | 5,688 றுத்தல் | 7486 றுத்தல் |
| ஜூலை | 4,230 " | 3,180 " |
| ஆகஸ்ட் | 14,784 " | 17,352 " |
| செப்டம்பர் | 5,132 " | 7,504 " |
| அக்டோபர் | 9,672 " | 11,052 " |
| நவம்பர் | 5,010 " | 3,150 " |
| டிசம்பர் | 23,034 " | 25,735 " |

காங்கேசன்துறைக்கு

## நவீன சந்தை

அளவெட்டி, வியாழன்

காங்கேசன்துறையில் நவீனசந்தை அமைப்பதற்கு பட்டினசபை தனது வரவு — செலவுத் திட்டத்தில் ரூபா 25,000 ரூபாவை ஒதுக்க உத்தேசித்துள்ளது.

ஒரு கலன் ஒரு சதமாக விநியோகிக்கப்பட்டுவரும் குடிநீரை அடுத்த வருடத்திலிருந்து இலவசமாகவழங்குவதெனவும் பட்டின சபைக்குட்பட்ட ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் விநியோகிப்பதெனவும் சபை தீர்மானித்துள்ளது.

## "வெள்ளிக்கிழமைகளில் இறைச்சிக்கடைகளை மூடுங்கள்'

### யாழ். மாநகரசபை ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

'இறைச்சிக்கடைகளை வெள்ளிக்கிழமைகளில் மூடிவிடுங்கள்' என்று யாழ். மாநகரசபைஎல்லைக்குள் இறைச்சிக்கடைகளை வைத்திருப்போருக்குவேண்டுகோள்ஒன்றினைவிடுத்திருக்கிறார், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

'இந்த வேண்டுகோளை இந்நகரில் வாழும் பெரும்பான்மையான சைவ மக்களின் விருப்பத்தின்பேரில் சமர்ப்பிக்கிறேன். வெள்ளிக்கிழமைகளில் மிருகங்களைக் கொல்வதையும் இறைச்சிகளை விற்பதையும் பற்றிப் பெரும்பான்மையான மக்களின் அபிப்பிராயத்துக்கு உரியமரியாதை அளிக்க வேண்டியது இம்மாநகர சபையின் கடமைஎன்பதை நீங்கள் உணர்வீர்கள்.

## ஹார்லிக்ஸ் விலை கூட்டி விற்றதாக வழக்கு

அளவெட்டி, புதன்

ஹோர்லிக்ஸ் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு விற்றதாக இரு வர்த்தகர்கள்மீது மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதான வீதியிலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் ஒரு போத்தல் ஹோர்லிக்ஸை ரூபா 5-50 சதத்திற்கு விற்றதாக ஒரு வர்த்தகர் மீதும் உரும்பராயுலுள்ள வர்த்தகர் ஒருவர் மீது ஹோர்லிக்ஸை கட்டுப்பாட்டு விலையிலும் ரூ. 3-80 சதம் கூட்டி விற்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் ஒரு தீப்பெட்டியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 5 சதம் கூட்டி விற்றதாகவும், சுன்னாகத்தைச் சேர்ந்த மற்றொரு வர்த்தகர் கட்டுப்பாட்டு விலை 51 சதமாக இருக்க பாசிப்பயறு 70 சதத்திற்கு விற்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ் நெத்தசிங்கா முன்னிலையில் இந்நான்கு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகள் குற்றவாளிகள் எனக் கூறியதைத் தொடர்ந்து 68-ம் ஆண்டு பெப்ரவரி 10-ம், 16-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## மாற்று இருதயமனிதர் காலமானர்

கேப்டவுண், டிச. 21

மாற்று இருதயம் பொருத்தப்பட்டு, 18 நாட்களாக உயிர்வாழ்ந்து வந்தவரான லூயி வஷ்கான்ஸ்கி இன்று காலை இறந்துவிட்டார்.

நுரையீரலில் சன்னி ஏற்பட்டதைத்தொடர்ந்து இவருடைய உடல்நிலை மோசமாகி இருந்தது. டாக்டர்கள், இவருடைய உயிரைக் காப்பாற்றப்பாடுபட்டனர். ஆனல், அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இவருக்கு விபத்தொன்றில் மாண்ட இளம் பெண்ணின் இருதயம் பொருத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

## மோசமான பால்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதிகளில் இலவசமாகக் குழந்தைகளுக்கு சுகாதாரப் பகுதியினரால் விநியோகிக்கப்படும் பால் மோசமானதாக இருப்பதாகப் பொதுமக்களில் பலர் புகார்செய்துள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறர் உனக்குச்செய்த குற்றங்களினுலே உனக்குக் கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அந்தக் கோபம் அடங்கிவிடும்.

—ஸ்ரீ நாவலர் பெருமான


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 7ம்திகதி [22-12-67]


## இலங்கை - இந்திய யாத்திரை

இலங்கையிலிருந்து இந்தியாவுககு யாத்திரை செல்லுபவர்கள், இனி ஜனவரி 1-ந் திகதியிலிருந்து தலைமன்ஞர்-ராமேச்வரம் கப்பல் வழியாகவும் செல்ல முடியுமென்று ஒரு செய்தி கூறுகிறது. இது வரவேற்கத் தக்கதாகும்.

ராமேச்வரத்தில் கப்பல் துறை கட்டுவதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் இந்தவழி சென்றசில மாதங்களாக மூடப்பட்டிருந்தது. இந்தியா செல்லுபவர்களுக்கு விமான வழி ஒன்றுதான் இருந்தது. ரூபாய் மதிப்புக்குறைந்து விமானக்கட்டணமும் கூடிவிட்டதால் பணவசதி உள்ளவர்களே விமான வழியாகச்செல்லக்கூடியதாக இருந்தது. இனி கப்பல்வழி மீண்டும் திறக்கப்படுவதால், ஏழைகளும் கூட யாத்திரை செய்ய வாய்ப்புக் கிடைக்கும்.

ஆனுல் வலதுகைகொடுத்ததை இடதுகை பறிப்பதுபோல், ரயில்வழியே இந்தியா செல்லும் இலங்கையர், செலாவணி பர்மிட் பெற்ருலே ரயில்டிக்கெட் கிடைக்குமென்ற ஒரு குருட்டுத்தடை ஏற்கெனவே 'டயஸ்' தர்பாரில் போடப்பட்டது. இந்தியர்கள் யாரும் அவ்வித பர்மிட் இல்லாமல் டிக்கட் வாங்கலாமாம். இலங்கையருக்கு ஏன் இந்தத் தடை? சின்னப்புத்தி படைத்தவர்கள் யாரோ போட்ட இந்த அநியாயத் தடையை, உடன் நீக்கவேண்டுமென்றே இதை எழுதுகிருேம்.

விமானத்தில் செல்வந்தர்களே செல்லமுடியும். ஏழைகளும் யாத்திரை செல்லுவதை ஏன் தடுக்க வேண்டும்? ரயில் சீட்டுக்கு செலாவணி 'பர்மி_' கேட்டால், அது இலகுவில் கிடைக்காதென்பது பகிரங்க ரகசியம். இந்தியா-இலங்கை தொடர்புகளைக் கூடுமானவரை குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே சென்ற அரசாங்கம் இவ்வித தடையினைப்போட்டது. மனிதரின் அடிப்படைஉரிமையாகிய யாத்திரைக்குத்தடைபோட்டதும், சென்ற ஆட்சியாளர்கள் தோற்றதற்கு ஒரு காரணமாகும். அதே தவறை தேசிய அரசாங்கம் செய்யப்படாது. விமான யாத்திரைக்கு செலாவணி'பர்மிட்'இல்லாமலிருக்கையில், ரயில்வே மூலம் யாத்திரை செய்வதற்கு 'பர்மிட்' கேட்பதின் காரணம் புரியவில்லை

இவ்விஷயமாகவேறொரு அர்த்தமற்ற தடையுமுள்ளதாகப் புகார் கிடைக்கின்றது. திருச்சியிலிருந்து கொழும்புக்கு விமானமூலம் 'டிக்கெட்' வாங்க 'பர்மிட்' எதுவும் தேவையில்லாதிருக்கையில் யாழ்ப்பாணத்துக்கு வருபவர்கள் 'பர்மிட்' எடுத்தால்தான் டிககெட் வாங்கமுடியுமாம்! அதிக தூரமுள்ள இடத்துக்கு 'பர்மிட்' நிபந்தனை இல்லாதிருக்கையில், பாதி தூரமேயுள்ள யாழ்ப்பாணத்துக்கு மட்டும் இந்த நிபந்தனை போட்டிருப்பது உண்மையாயின் இது நியாயமென்ருே, பகுத்தறிவுக்குப் பொருத்தமென்ருே கூறமுடியாது.

யாத்திரை வசதிகளை அதிகரிக்கஇவ்வாண்டிலே கூடுமானதைச் செய்ய வேண்டுமென்று இலங்கை, இந்தியா உள்ளிட்டு உலக நாடுகள் எல்லாம் முற்பட்டுள்ளதாய் அறிவிக்கப்பட்டது. அண்டைநாடுகளான இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே யாத்திரை செய்ய வீண் தடைகள் போடுவது, சிறப்பாக இலங்கைப் பொதுமக்களுக்குச் செய்யும் இம்சையாகும். இது அரசாங்க பிரதிநிதிகளும் நேரில் கலந்துபேசி, இவ்விரு தேசங்களுக்கு மிடையேயுள்ள யாத்திரைத் தடைகளைக் கூடுமானவரை நீக்கவேண்டியது பலகாரணங்களாலும் அவசியமாகும்.

# 'தமிழ் இலக்கியம வளர்ந்தே வருகிறது'

# சென்னை எழுத்தாளர் மகாநாட்டு பட்டிமன்றத்தில் பேச்சு

சென்னை, டிச. 21

நவீன தமிழிலக்கியம் வளர்ச்சியடைந்து வருகிறதா அல்லது தேக்கமடைந்துள்ளதா என்னும் பொருள் குறித்து தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 15-வது மாநாட்டில் ரசமானதோர் 'பட்டி மன்றம்' நடைபெற்றது.

தமிழ் இலக்கியம் வளர்ந்துளளது என்று கு. அழகிரிசாமி, ராஜேஸ்வரி (குயிலி) கோமதி ஸ்வாமிநாதன், முகவை ராஜமாணிக்கம் ஆகியவர்கள் பேசுகையில் சமீப வருடங்களில் சிறந்த தமிழ்இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன என்று கூறினர்.

தமிழ்இலக்கியத்தில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றுவாதித்த ஒளவை நடராஜன், திருமதி வசுமதி ராமசாமி, ஜெயராமன், நா. பார்த்தசாரதி ஆகியவர்கள் தீண்டாமை, காதல், ஒழுக்கக்குறைவு முதலிய பழைய கருத்துக்களின் அடிப்படையிலேயே தமிழிலக்கியம் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறதே தவிர பொருளாதாரப் பிரச்னைகள், விஞ்ஞான வளர்ச்சி ஆகிய நவீன கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட் புதுமை இலக்கியம் வளரவில்லையென்றும், ஆபாச நூல்களே அதிகம் வெளிவருவதாகவும், மேல்நாட்டு இலக்கியங்களைப்போல சுயமான சிந்தனை நமது எழுத்தாளர்களுக்கு ஏற்படவில்லையென்றும் கூறினர்.

பட்டிமன்றத்திற்கு நடுவராக அமர்ந்த கி. வா. ஜகந்நாதன் இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து, தமிழிலக்கியம் வளர்ந்து வருகிறது என்று உறுதியாகக் கூறமுடியும் என்று தீர்ப்பளித்தார். கருத்துக்கள் எக்காலத்திலும் ஒன்றேதான். அவற்றுக்கு வடிவம் கொடுப்பதில்தான் புதுமையைக் கையாளமுடியும் என்றும் அவர் கூறினர். தமிழ் நூல்களை பிறநாட்டவர் மொழிபெயர்க்கும் போக்கு தமிழிலக்கிய வளர்ச்சிககு எடுத்துக்காட்டாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அதிபரின் வரவேற்புரையுடன ஆரம்பிக்கப்பட்ட மன்றத்தில ''பிறநாடுகளில் எழுத்தும் எழுத்தாளரும்'' என்பதுகுறித்து தினமணி துணையாசிரியர் ஏ. ஜி. வெங்கடாச்சாரி தலைமையில் சில எழுத்தாளர்கள் அவரவர் வெளிநாடுச் சுற்றுப்பிரயாண அனுபவங்கள் பற்றி பேசினர்கள்.

ஏ. ஜி. வேங்கடாச்சாரி தமது ஜெர்மன் நாட்டு சுற்றுப்பிரயாணத்தை பற்றிப் பேசுகையில், அந்நாட்டில் உலகப் பேரிலக்கியங்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கி. ராஜேந்திரன் பேசுகையில், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இலக்கியத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய உத்திகள் பற்றிக் குறிப்பிட்டார். அத்தகைய உத்திகளை நாம்அவசரப்பட்டுபின் பற்றக்கூடாது என்று அவர் கூறினர்.

மணியம் பேசுகையில், அமெரிக்காவில் எழுத்தாளர்களுக்கு அளவுக்கு அதிகமான சுதந்திரமிருப்பதாகக் கூறினர்.

காதல் கதைகளும், துப்பறியும் கதைகளுமே அந்நாட்டில் மிக அதிகமாக விற்பனையாவதாக அவர் குறிப்பிட்டார்.

கே. திரவியம் [விவசாய இலாகா இயக்குனர்] தமது ரஷ்ய சுற்றுப்பிரயாணம் பற்றிப் பேசுகையில், அந்நாட்டில் எழுத்தாளர்களுக்கு மிகுந்த கௌரவம் தரப்படுவதாகவும், லெனின் முதலிய தலைவர்களிடம் மக்கள் பக்தி கொண்டிருப்பதாகவும் கூறினர். ஆனுல் அங்கு எழுத்தாளர்களுக்கு சுதந்திரம் குறைவு என்று அவர் குறிப்பிட்டார்.

தி. ஜானகிராமன் பேசுகையில், ஜப்பானில் மேனுட்டு இலக்கியங்களை ஜப்பானிய மொழிகளிலேயே படிப்பதாகவும் ஆனுல் அவர்கள் தங்களது பழைய இலக்கிய மரபை மறக்கவில்லை என்றும் கூறினர்.

செல்லையா, மலாசியாவில் தமிழ் இலக்கியம் வளர்ந்து வருவதைப் பற்றியும் கணேசன் இலங்கையில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் பற்றியும் பேசினர்.

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

[22-12-67]
வெள்ளிக்கிழமை
மார்கழி மீ 7 உ

நட்சத்திரம்- மகம். மாலை 6-39 மேல் பூரம்

திதி- ஷஷ்டி. பி.இரவு 4.25

சுபநேரம்- 6-25 7-55

ராகுகாலம்10-55 12-55

மேஷம்- பிதாவழிப் பெருமை, பிரகாசவாழ்வு
ரிஷபம்- முன்னேற்றமுண்டு, முயற்சியே வேண்டும்.
மிதுனம்- தேனன வாழ்வு தேடியது கிடைக்கும்.
கடகம்- துஷ்டர் உறவு துயரச் செய்தி.
சிம்மம்- விழிகள் குளமாகும். வேதனை தாக்கும்.
கன்னி- கன்னல் மொழி கவர்ச்சியுமுண்டு.
துலாம்- தனம் தடைப்படும், தள்ளாடும் நிலை.
விருச்சிகம்- அன்புப் பணி. ஆதரவுமுண்டு.
தனுசு- ஆயுத பயம், அவசரம் வேண்டாம்.
மகரம்- கடன்பட நேரிடும், கவனம் வேண்டும்.
கும்பம்- அன்பு மனம், அறவழி நாட்டம்.
மீனம்- கொடுக்கல் வாங்கல்கள் குழப்பத்தில் முடியும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

ஆசிரியருக்கு கடிதம்

## சிலைக்ளை இங்கிருந்தே கொண்டு செல்லலாம்

நாவலர் பெருமானுக்கு தமிழாராய்ச்சி மகாநாட்டில் சிலை எடுக்காததுபெருங் குறைதான். ஆனுல் அதற்காக தமிழக அரசாங்கத்தை குறைகூறுவதற்கில்லை. பத்திரிகைச் செய்திகளின்படி தனிப்பட்டவர்களே சிலைகளை நிறுவமுன்வந்துள்ளனர்.

அறிஞர் கால்டுவெல், போப்பையர், வீரமாமுனிவர் போன்ருேரின் சிலைகளை கிறிஸ்தவ பெருமக்களும், திருவள்ளுவர் சிலையை நடிகர் சிவாஜி கணேசனும், அண்ணுவின் சிலையை நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், கம்பர் சிலையை கம்பர் அன்பர்களும். கண்ணகி சிலையை மாணவர்களும் நிறுவுகின்ருர்கள். இந்தநிலையில் ஈழத்தவர்களாகிய நம்மவர்கள் நாவலர் பெருமான், விபுலாநந்தர் போன்றபெருமக்களின் சிலைகளை உருவாக்கி வழங்கியிருக்கலாம். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. மகாநாட்டுக்குப் போகும் குழுவினரே முதலில் மகாநாட்டுக் குழுவினருக்கு அறிவித்துவிட்டு இங்கிருந்தே சிலைகளை அங்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யமுடியாதா! அண்ணுவுக்கு கடைசி நிமிடத்தில் அவசரத்தந்தி அனுப்புவதை விட ஆக்கமாக ஏதாவது செய்தால் நன்று.

ஓர் அன்பர்

## ஐயாறன் எழுதுவது

சென்னையிலே நடைபெறும் உலகத் தமிழ்விழாவின்போது பல தமிழ் அறிஞர்களின் உருவச்சிலைகளை வைப்பது வீண் செலவல்லவா? அந்தப் பணத்தை மக்களுக்குப் பயன்படும்படியான கஷ்ட நிவாரண வேலைகளுக்குப் பயன்படுத்தக்கூடாதா? என்று பத்திரிகைக்காரர்கள் கேட்டதற்கு, சென்னை முதல் அமைச்சர் 'அண்ணு' அளித்துள்ளபதில்இவ்விஷயமாகப் பல சந்தேகங்களை நீக்குவதாகும்.

''மகாநாட்டின் நிதியில் இருந்து இச்சிலைகளுக்சாக எவ்வித செலவும் செய்யவில்லை. அங்கு வைக்கும் ஒவ்வொரு சிலையும், பிறர் அதற்காக என்றே கொடுத்த பணத்தைக் கொண்டே அமைக்கப்பெறுகிறது. குறிப்பிட்ட காரணத்துக்காக அவர்கள் கொடுத்த பணத்தை நாம் வேறு செலவு செய்யமுடியாது'' என்ருர் சென்னை முதல் அமைச்சர். நியாயம்.

ஃ ஃ

தமிழுக்குப் பணிசெய்துள்ள பல அறிஞர்களின் சிலைகளை அங்கு வைக்கையில், தமிழ் வசனநடைகைவந்தவல்லாளரும், தமிழுக்கு அரும்பெரும் தொண்டு செய்தவருமான நமது நாவலர்பெருமானின் உருவச்சிலையைச் சென்னையில் வைக்காதது பெரிய குறையே.

சென்னை முதல் அமைச்சர் கூறியதைப் பார்க்கையில், யாராவது நாவலர் சிலை வைப்பதற்கான நிதி கொடுத்திருப்பின், அச்சிலையும் அங்கு இடம்பெற்றிருக்கும். தமிழகத்தில் நாவலர் பெருமான் செய்துள்ள தொண்டு கொஞ்சமல்ல. அவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் தந்து, பல வகைகளிலும் ஆதரவளித்தது தமிழகமே. அவரது சிலையை ஏற்கனவே நன்றியுடன் அங்கு வைத்திருக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலும்கூட அதை வைக்காதது தமிழுக்கு மட்டுமன்றிச் சைவத்துக்கும் செய்த அவமதிப்பாகும்.

இப்போதும்கூடக் காலம் கடந்துவிடவில்லை. நாவலர் பெருமானின் சிலையை வைப்பதற்கான ஒரு நல்ல இடத்தை ஒதுக்கி, அங்கு விழாவின்போது ஒரு கல் வெட்டு ஸ்தாபித்து, பின்னர் சிலை தயாரானதும் அதை விழா நடத்தி வைக்கலாம். தமிழகத்திலுள்ள மக்கள் இதைச் செய்வார்களா?

ஃ ஃ

ஆனுல் தமிழகத்தைக் கேட்குமுன், நாம் இங்கு நாவலர் பெருமானுக்கு என்ன செய்தோமென்பதை நம்மில் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ளவேண்டும். ஓரன்பர் இரு தினங்களுக்கு முன் வந்து, இங்கு அவருக்குச் சிலை எடுக்க விசேஷ முயற்சி செய்யப்போவதாகத் தெரிவித்தார் மிகவும் நல்லது. பிறரை நாம் குறை கூறுமுன், நமது குறையை உணர்ந்து அதை திருத்திக்கொள்ளுவதே விவேகமும், பயனுள்ளதுமாகும்.

சிலை வைப்பதுடன் நமது கடமை தீர்ந்துவிடாது. அவர் தமது நூல்களில் கூறியுள்ள அறவுரைகளைப் படித்து உணர்ந்து அவ்வழி ஒழுகுவதே. அதிக முக்கியமும், அப்பெருமானின் ஆத்மாவுக்கு மகிழ்ச்சியளிப்பதுமாகும்.

வேலணையைச் சேர்ந்த அன்பர் மு சி. சிற்றம்பலம்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈமன் - சவுதி அரேபியாவுக்கிடையே நெருக்கடி நிலை தோன்றியுள்ளது

## 'உள்நாட்டு விவகாரங்களில் சவுதி அரேபியா தலையிடுகிறது'

### ஈமன் குற்றச்சாட்டு

சானு, டிசெ. 21

**ஈமன் குடியரசுக்கும் சவுதி அரேபியாவுக்குமிடையே நெருக்கடி தோன்றியுள்ளது.**

**ஈமனின் உள் விவகாரங்களில், சவுதி அரேபியா ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி, ஈமன் ஜனதிபதி இரியாணி, சவுதி அரேபிய மன்னர் பெயிஸானுக்கு அனுப்பியுள்ள கடுமையான கடிதமே இதற்குக் காரணமாகும்.**

ஈமன் ஜனதிபதி, அரபு மற்றும் இதர இஸ்லாம் நாடுகளின் தலைவர்களுக்கும் சவுதி அரேபியாவின் குறுக்கீடு பற்றிய புகார் செய்து கடிதம் அனுப்பியுள்ளார். சவுதி அரேபியா, ஈமனின் உள் விவகாரங்களில் குறுக்கிடுவதைத் தடை செய்யுமாறு அவர் இத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

### உள்நாட்டுப் போர்

ஈமனில், பல வருடங்களாக, குடியரசு வாதிகளுக்கும் முடியரசுவாதிகளுக்குமிடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்துள்ளது. இப்போது ஆட்சியிலுள்ளவர்கள் குடியரசுவாதிகளே.

குடியரசுவாதிகளின் ஆட்சியை எதிர்த்து முடியரசுவாதிகள் பலாத்கார எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கலகக்காரர்களுக்குச் சவுதி அரேபியா, ஆயுதங்களும், பாகாப்பும் அளித்து வருவதாக ஈமன் குற்றஞ் சாட்டியுள்ளது.

### இராணுவ சேவை

இதற்கிடையில், தலைநகர் சானு மீது தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவதைத் தொடர்ந்து. ஈமன் ஜனதிபதி, மக்களனைவரையும் இராணுவ சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

## ஆஸி. பிரதமர் அஞ்சலி சேவை

கான்பெரா, டிச. 21

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் இன்று காலை கான்பெரா வந்து சேர்ந்தார் அவர், மறைந்த ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்டின் அஞ்சலிப் பிரார்த்தனைச் சேவையில் கலந்துகொள்ள ஆஸ்திரேலியா வந்துள்ளார்.

இந்தியா மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இச்சேவையில் கலந்து கொள்ளவென ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர்.

'சைப்பிரஸிலிருந்து

## அந்நிய துருப்புகள் வெளியேற வேண்டும்'

### ஐ. நா. பந்தோபஸ்து சபையில் சைப்பிரஸ் வெளியுறவு மந்திரி

நியூயோர்க், டிச. 21

சைப்பிரஸ்பிரச்னைமீதான விவாதம் நேற்று ஐ. நா. பந்தோபஸ்து சபையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சைப்பிரஸிலிருந்து கிரேக்க, துருக்கிய துருப்புகள் யாவும் வெளியேற வேண்டுமென சைப்பிரஸ் வெளியுறவு மந்திரி கேட்டுக்கொண்டார்.

அந்நிய துருப்புகள் சைப்பிரஸிலிருந்து வெளியேறும் அதேநேரத்தில், சைப்பிரஸின் பாதுகாப்புக்கு ஐ. நா. பந்தோபஸ்துசபை உத்தரவாதம் அளிக்கவேண்டுமெனவும் சைப்பிரஸ் வெளியுறவு மந்திரி கேட்டுக் கொண்டார்.

சைப்பிரஸபிரச்னைமீதான கிரேக்க—துருக்கிய ஒப்பந்தம் எதையும் சைப்பிரஸ் ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் அறிவித்தார். சைப்பிரஸ் பிரச்னையில் சைப்பிரஸ் மக்களுக்கும் பங்குண்டு என்ருர் அவர்.

சைப்பிரஸ்பிரச்னைமீதான ஐ. நா. பந்தோபஸ்து சபையின் நேற்றைய கூட்டம், எவ்வித முடிவுமின்றி இன்று மாலைவரை ஒத்திவைக்கப்பட்டது.

## அமெரிக்க தூதரகத்தில் ரஷ்ய இளைஞர் தஞ்சம்

### புது டில்லியில் சம்பவம்

புதுடில்லி, டிசெ. 21

இந்தியாவுக்கு விஜயஞ்செய்துள்ள சோவியத இளைஞர் தூது கோஷ்டியின் அங்கத்தவர் ஒருவர் நேற்றுப் புதுடில்லியிலுள்ள அமெரிக்கத தூதராலயத்தினுள் நடந்து சென்று, அங்கு தமக்குப் பாதுகாப்புக் கேட்டுக் கொண்டார்.

இத்தகவலைப் புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகம், இந்திய அரசாங்கத்திடமும், சோவியத தூதரகத்திடமும் அறிவித்தது.

அமெரிக்கத் தூதரகத்தினுள் சென்ற 28 வயதான அந்த ரஷ்ய இளைஞர், அரசியல் அபயம் வேண்டுமென கேட்கவில்லை. தூதரகத்தில் தற்போதைக்கு தங்க அனுமதிக்குமாறே முதலில் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி இந்திய அரசாங்கத்திடமும், சோவியத் தூதரகத்திடமும் அறிவித்த அமெரிக்கத் தூதரகம், சோவியத் தூதரகப் பிரதிநிதி ஒருவருக்கும், ரஷ்ய இளைஞருக்குமிடையே பின்னர் ஒரு சந்திப்பை ஒழுங்கு செய்தது.

ஆனல் இச்சந்திப்பின் போதும், இளைஞர் தனது மனதை மாற்ற மறுத்து விட்டார்.

## 'சமாதானம் காண இஸ்ரேல் தடை'

### ஐ. அ. கு. அதிகாரி கூறுகிருர்

கெயிரோ, டிச. 21

இஸ்ரேல் எடுத்துக்கொண்டுள்ள நிலை மேற்கு ஆசியாவில் ஐ. நா.வின் விசேஷ பிரதிநிதியான டாக்டர் ஜாரிங்கின் நல்லெண்ணத் தூது விஜயத்தின் வெற்றிக்கு கதவடைத்துவிட்டதாக ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்துள்ளார்.

அரபு நாடுகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதையே இஸ்ரேல் வலியுறுத்தி வருவது ஜாரிங்கின் சமாதான முயற்சிகள் நிறைவேறுவதற்குத் தடையாகவுள்ளது.

குறிப்பிட்ட ரஷ்ய இளைஞருக்கு அமெரிக்கா செல்வதற்கான குடியேற்றவிஸா ஒன்றைத் தாம் இப்போது தயாரித்துவருவதாக அமெரிக்கத் தூதரகம் இந்திய அரசாங்கத்திடமும், சோவியத் தூதரகத்திடமும் அறிவித்துள்ளது.

## 'தென்னிந்திய மொழியொன்றை இந்திபேசும் மக்கள் கற்பதுநலம்'

### பிரதமர் இந்திரா கருத்து



புதுடில்லி, டிச. 21

இந்திய ஆட்சிமொழி திருத்த மசோதாவின் நோக்கம், இந்தியாவின் ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதும், இந்தி பேசாத மக்களின் நலன்களுக்கு இடமளிப்பதுமேயாகும் என்று இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று ராஜ சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாட்டில் ஐக்கியத்தை வளர்ப்பதற்கும், மொழிப் பிரச்னையில் உடன்பாடு காண்பதற்கும் ராஜ்ய அரசாங்கங்களும், அரசியற் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டுமென்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் மும்மொழித் திட்டம் அமுலாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் வலியுறுத்தினுர்.

இந்தி பேசும் மக்கள், பிறிதொரு பிராந்திய மொழியை, விசேஷமாக தென்னிந்தியமொழி ஒன்றினைப்படிக்க வேண்டிய கடமை அவர்களைச் சார்ந்துள்ளதெனப்பிரதமர் கூறினுர்.

## பத்திரிகையாளர் மீது பொலீசார் தாக்குதல்

### மேற்கு வங்காள அரசு மன்னிப்பு கோரியது

கல்கத்தா, டிசெ. 21

நேற்றுக் கல்கத்தாவிலும் இதர பகுதிகளிலும் முன்னைய ஆளுங் கட்சியான ஐக்கிய முன்னணி ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்டங்களின் போது, பத்திரிகையாளர் பொலிஸாரால் தாக்கப்பட்டதையொட்டி மேற்கு வங்காள அரசாங்கம், அவர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது 4 பத்திரிகையாளர் கடுமையான காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மொத்தம் 40 பத்திரிகையாளர் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளானுர்கள் என்று கூறப்பட்டது.

### விசாரணை

பத்திரிகையாளர் தாக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடாத்தப்போவதாகவும் மேற்கு வங்காள அரசு அறிவித்துள்ளது.

பொலிஸ்கமிஷனர் தனிப்பட்டமுறையில், பத்திரிகையாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

### 500 பேர் கைது

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது கல்கத்தா தவிர்ந்த ஏனைய பகுதிகளில், சுமார் 500க்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். 34 பொலிஸார் காயமுற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கல்லூரி அதிபர்கள் அறிக்கை

இதற்கிடையில், கல்கத்தா மற்றும் பகுதிகளிலுள்ள கல்லூரி அதிபர்கள்' மாணவர்களைத் தெருக்களுக்கு இழுத்து, அரசியல் பிரச்னைகளைத் தெருக்களில் வைத்து முடிவுகாண முயல்வதை நிறுத்துமாறு அரசியற் தலைவர்களைக் கோரும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

கிரீசில்

## பார்லிமெண்டரி ஜனநாயகத்தை மீண்டும் நிறுவுவதாக உறுதிமொழி

### ஆட்சியாளரிடம் மன்னர் கோரும் ஒரே நிபந்தனை

ரேம், டிசெ. 21

**ரேமில் தற்போது தங்கியிருக்கும் கிரீஸ் மன்னர் கொண்ஸ்டன்டைன், கிரீஸ் இராணுவ ஆட்சியாளர் கிரீசில் மீண்டும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தை நிறுவுவதென உறுதிமொழி அளித்தால், தாம் தமது தாயகத்துககுத் திரும்பத் தயாராக் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.**

அவர் இங்கு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், தாம் கிரீசுக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கு ஒரே ஒரு நிபந்தனையைக் கோருவதாகக் கூறியுள்ளார்.

தற்போது கிரீசில் பதவியிலுள்ள ஆட்சியாளர், அங்கு மீண்டும் ஒரு பார்லிமெண்டரி ஜனநாயகம் நிறுவுவதற்கான உறுதியான, பூரணமான ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே தமது அந்த ஒரே நிபந்தனையென்றும் மன்னர்கொண்ஸ்டன்டைன் அறிவித்தார்.

### அதிகாரங்களை வலியுறுத்தவில்லை

அரசருக்குரிய அதிகாரங்கள் யாவும் தமக்குத் திரும்பவும் அளிக்கப்பட வேண்டுமென மன்னர் தமது அறிக்கையில் வலியுறுத்தவில்லை.

தமது நாட்டில் மீண்டும் பார்லிமெண்டரி ஜனநாயகம் நிறுவப்படுமென ஆட்சியாளர் தமக்கு உறுதிமொழி அளிக்க வேண்டுமென்றும், ஒரு புதிய அரசியல் சாஸனத்துக்கான பொதுஜன வாக்கெடுப்பொன்றை அவர்கள் நடத்த வேண்டுமென்றுமே மன்னர், தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### இராணுவத்தலைவர்கள் ஓய்வு

இதற்கிடையில், அதென்சில், கிரேக்க இராணுவத் தலைவர்கள், தமது இராணுவப் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாக அறிவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறை

## பட்டினசபைக்கு புதிய காரியாலய கட்டடம்

புலோலி, வியா.

வல்வெட்டித்துறைப் பட்டினசபைக்கு ஒரு நிரந்தர காரியாலயக்கட்டிடம் விரைவில் நிறுவப்படுமென தெரியவருகிறது. சுமார் அரை லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இக்காரியாலம் வல்வை நெடியகாடு சனசமூகநிலையத்திற்கு முன்பாகவுள்ள கடற்கரை மைதானத்தில் அமையும் என அறியப்படுகிறது

இதற்கான இடத்தை அரசாங்க கட்டிடப்பகுதி என்ஜினியர் விசேஷ அழைப்பின் பேரில் வந்துபார்வையிட்டார். வல்வை பட்டின சபைத்தலைவரும் கட்டிடப் படவரைவாளரும் மற்றும் தொகுதி எம். பி. திரு. கே. துரைரத்தினமும் இவருடன் வந்திருந்தனர். அடுத்த வருடம் கட்டிடத்துக்கான அத்திபாரக்கல் நாட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும், வருட நடுப்பகுதியில் கட்டிடவேலைகள் முடிவடைந்துவிடுமென நம்பப்படுவதாகவும் தெரிகிறது.

இப்பட்டினசபைக்கு ஒரு நிரந்தரக்கட்டிடத்துக்கென வல்வைப் பொதுமக்கள் பணம் சேர்த்து 4,000 ரூபா அடையாளப்பணமாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## "எமது நாடும் இசைஉலகில் முன்னணியில் திகழும்"

அளவெட்டி, வியாழன்

"தமிழகத்தில் நடைபெறவிருக்கும் இசைவிழாக்களில் ஈழத்துநாதசுரக்கச்சேரியை முதல்முறையாக இடம்பெறச் சந்தர்ப்பம் அளித்தது ஈழத்து கலைஞர்களுக்கு மாத்திரமல்ல, ஈழத்துக்கே பெருமை அளித்ததாகும். இம்முறை எனக்கும் எனது குழுவினர்க்கும் சந்தர்ப்பம் அளித்ததுபோல் எதிர்காலத்தில் ஈழத்து நாதசுர தவில் கலைஞர்களுக்கும் இசைவிழாக்களில் இடமளித்து எமது நாடுகளிளிடையே கலைப் பரிவர்த்தனை ஏற்படுத்தவேண்டும் என்பதே எனதுஆசை" என தமிழக இசைவிழாக்களில் முதன்முறையாக ஈழத்தில் இருந்து பங்குபற்றும் பொருட்டு அகிலஇலங்கை பிரபல நாதசுரவித்துவான் எழிலிசைவேந்து திரு. என். கே. பத்மநாதன் தமது குழுவினருடன் பலாலி விமானநிலையத்தில் தமிழகம் செல்லமுன் நமது நிருபரிடம் கூறினர். பலாலி விமானநிலையத்தில் திரு. பத்மநாதன் குழுவினரை பல கலைஞர்களும் ரசிகர்களும் பிரமுகர்களும் குதூகலத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

மேலும் திரு. பத்மநாதன் கூறுகையில், தமிழக இசைவிழாக் குழுவினரின் இப்பெரும் செயல் இலங்கை—இந்திய நாடுகளுக்கிடையே பாரம்பரிய அன்பையும், நல்லுறவையும், கலைத் தொடர்பையும் ஏற்படுத்துவதோடு இசைஉலகில் எமது நாடும் முன்னணியில் திகழ வழிசெய்யுமெனக் கூறினர்.

இவருடன் நாதசுரவித்துவான் கோண்டாவில் வி.எ. பாலகிருஷ்ணனும் தவில் வித்துவான் அளவெட்டி வி. என். குமரகுருவும் சென்றுள்ளனர்.

## தொழில்நுட்ப கல்லூரி தமிழ்மன்ற உத்தியோகத்தர்

கொழும்பு, வெள்ளி

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி தமிழ்மன்றக் கூட்டம் திரு. கு. ஸ்ரீ. கணேசதேவ் தலைமையில் நடைபெற்றது.

சென்ற ஆண்டு ஏற்பட்ட சில நெருக்கடிகாரணமாக மன்றம் முத்தமிழ்விழா, சஞ்சிகை வெளியீடு முதலியனவற்றை செய்யத் தவறிவிட்டதெனவும், புதிய ஆண்டில் இவைகள் பூர்த்தி செய்தல் அவசியமென்றும் திரு. கதிரவேல்நாதன் பேசுகையில் கூறினர்.

1967—68-ம் ஆண்டுக்கான புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெற்றது. விபரம் வருமாறு:

தலைவர்: ஸ்ரீ கணேசதேவ், உபதலைவர்: ஐ. ஏ. ஹமீட், செயலாளர்: க. விஜயரத்தினம், உபசெயலாளர், எஸ். சந்தியாப்பிள்ளை, பொருளாளர்: இ. சி. தனபாலசிங்கம், இலக்கியசெயலாளர்: எஸ். பாலசுப்பிரமணியம் பத்திராதிபர்: ஏ, மகேஸ்வரன் ஆறுபேர் கொண்டசெயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## பார்லிமெண்டரி....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இப்போது கிரீசில் உள்ள ஆட்சி, முற்றிலும் சிவிலியன் ஆட்சியாக விளங்குகிறது.

இராணுவத் தலைவர்கள் தமது பதவியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளது, எதிர்வரும் தேர்தலில் அவர்களைப் போட்டியிட வசதி செய்யவேயாகும்.


நத்தார்-புத்தாண்டை முன்னிட்டு



மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும்

ஜவுளி வகைகளுக்கு

10% வீதம்

கழிவுண்டு

ரூ. 50/-க்கு மேல் சாமான் வாங்குபவர்களுக்கு

அன்பளிப்பும் வழங்கப்படும்.

சிவரும்ஸ்

[நூதனசாலைக்கு முன்பாக]

12, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


## இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் நூறுகலைப்பட்டதாரி ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதை ஆட்சேபித்து, யாழ்ப்பாணம் எம்.பி.திரு. ஜி ஜி. பொன்னம்பலம், கல்விமந்திரி திரு இரியகொலைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது, யாழ்ப்பாணத்தில் ஜி. சி. ஈ. உயர்தரவகுப்புகளில்போதிக்கும் விஞ்ஞானபட்டதாரி ஆசிரியர்களின் இடமாற்றத்தை நீங்கள் ரத்துச்செய்ததையிட்டு எனது மகிழ்ச்சியை தெரிவிக்கின்றேன். அதே சமயம் ஜி சி. ஈ. சாதாரண உயர்தரவகுப்பு கலைப்பட்டதாரி ஆசிரியர்களையும் ஜி. சி. ஈ. சாதாரண வகுப்புகளில் படிப்பிக்கும் விஞ்ஞன பட்டதாரிகளையும் இடமாற்றம் செய்வதை கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

இப்படியான சுமார் நூறு பட்டதாரிகள் இடமாற்றம் செய்யப்படுவதாகவும், இவர்களின் இடத்திற்கு அனுபவவற்றவர்களையும், தராதரமற்றவர்களையும் நியமித்துள்ளதாகவும், சில இடங்கள் நிரப்பப்படவில்லையென்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம்செய்யப்படும் பட்டதாரி ஆசிரியர்களின் இடங்களுக்கு, தராதரம் குறைந்தவர்களைக்கொண்டு கூடஅவ்விடங்கள் நிரப்பப்படாதது நிலைமையை மேலும் மோசமாக்கக் கூடியதொன்று. ஆதலால் இப்படியான இடமாற்றங்களை ரத்துச்செய்யும்படி கோருகிறேன்.

## 750 குடும்பங்களுக்குமேல் அகதிகள்

உடுவில், வியாழன்

உடுவில், இணுவில், தாவடி, சுதுமலை போன்ற உடுவில் கிராமசபையின் எல்லைக்கு உட்பட்ட கிராமங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் 750க்கும் அதிகமான குடும்பங்கள் தமது சொந்தவீடுகளை இழந்து அகதிகளாக இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் உடுவில், இணுவில் பகுதி கிராமசேவையாளர்கள் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் பலர் அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உடுவில் கிராமசபைஇவர்களுக்கு இலவச மா, சீனி உணவுப்பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

## சாவகச்சேரி நகரசபை பட்ஜட்

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டம் சென்றவாரம் நகரசபைத் தலைவர் திரு ஆர். டி. சிவகுரு தலைமையில் நடைபெற்றபோது 1968-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் சபையில் விவாதிக்கப்பட்டது.

ரூபா 3,72. 453 எனவும் செலவு ரூபா 3,71,697 எனவும் தெரிவிக்கப்பட்டது.

விசேஷ முறையில் இவ் வரவுசெலவுத் திட்டத்தை [illegible] யும் அங்கத்தவர்கள் பலர் பாராட்டினர்.

யாழ்ப்பாணத்தில்

## தினம் 7 பஸ்கள் பழுதடைகின்றன

ஊர்காவற்றுறை, வியாழன்

தீவுப்பகுதியில் நாளுக்கு நாள் சீர்கேடடைந்துவரும் பஸ் சேவை பற்றி சரவணை பிரயாணிகள் சங்கத்தின் தூதுகோஷ்டி யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளருக்கு முறையிட்டபோது போதிய பஸ்கள் சேவைக்கில்லாதிருப்பதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். நாளொன்றுக்கு யாழ்ப்பாணப்பகுதியில் 7 பஸ்கள் பழுதடைவதாகவும் அவர் தெரிவித்ததாகத் தெரியவருகிறது. நிலைமையைச் சீராக்க தாம் கூடிய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் சங்க தூதுகோஷ்டியினருக்கு உறுதியளித்துள்ளார்.

## சம்பளம் உயர்த்த கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதாகவும் இதனை முன்னிட்டு ஆபரணக்கூலியைக் கூட்டித்தருமாறு நகை வியாபாரிகளையும் பாவிப்பாளரையும் யாழ்ப்பாணம் பொற்தொழில் ஒத்துழைப்புச் சங்கம் கேட்டுள்ளது.

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையில் ஈடுபட்டிருந்த ஒரு காவலாளியைத் தாக்கியதாக பொலிஸார் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் தங்காலையைச் சேர்ந்த ஒரு அப்போதிக்கரியை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் 300ரூபாய் பிணையில்செல்ல அனுமதித்துள்ளார். [வி. நி]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### பாலர் பாடசாலை

19, சாப்பல் வீதி,
யாழ்ப்பாணம்

1968 ஜனவரி 8-ம் திகதி ஆரம்பமாகிறது.
விண்ணப்பப்பத்திரங்கள் மேற்கண்ட விலாசத்தில் நேரிலோ எழுத்துமூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
371


## அறிவித்தல்

### மின் விநியோகம் தடைப்படல்

சுன்னாக மின் நிலையத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 23-12-67-ம் திகதியன்று காலை 7-30 மணி தொடக்கம் காலை 10-00 மணி வரையும் மின் விநியோகம் தடைப்படுமென யாழ்ப்பாண அரசாங்க மின்சாரப்பகுதியினர் அறிவித்திருப்பதை பொதுமக்கள் கவனத்திற்கு இத்தால் கொண்டுவருகிறேன்.

கப்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
21-12-67. 388

### தனுஷ்கோடி-ராமேஸ்வரம் ரயில் பாதை

சென்னை, டிசெம். 20
தனுஷ்கோடிக்கும் ராமேஸ்வரத்துக்கு மிடையேயான ரயில் பாதையை மீண்டும் ஆரம்பிப்பதற்கென தென்இந்தியரயில்வே அதிகாரிகள் நேற்று அப்பாதையைச் சென்று பார்வையிட்டனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 22-12-67

### கொழும்பு

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — கே. வி. ஆத்மநாதசர்மா, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 துதிப்பாடல்கள், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பஜனை, 6-30 கிறஸ்தவ கரோல், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 உரைச்சித்திரம், 10-00 தேர்ந்த இசை.

### திருச்சி 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-50 பக்திப் பாடல், 6-55 அறவுரை, 7-00 திருப்பாவை — திருவெம்பாவை, 7-15 தமிழில் செய்தி, 7-30 காந்தி அஞ்சலி, 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 நாதஸ்வரம், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 நாதஸ்வரம்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 இசைவிழாஅஞ்சல், 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி, 8-00 இசைவிழா, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 இசைமஞ்சரி, 9-30 இசைவிழா, 10-30 ஆங்கிலத்தில் செய்தி, 10-35 இசவிழா அஞ்சல்.

### மதராஸ் 1

காலை 6-00 வந்தேமாதரம், 6-05 துதிப்பாடல்கள், 6-15 திருப்பாவை — திருவெம்பாவை, 6-35 அருள்வாக்கு, 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நாதஸ்வரம், 7-15 தமிழில் செய்தி, 7-30 காந்திஅஞ்சலி, 8-00 பாட்டு — எஸ். கல்யாணராமன், 8-45 திரைகானம், 9-15 பாட்டு, 9-45 வாத்தியஇசை, 10-00 நாதஸ்வரம், 10-30 மதுரகீதம், 10-55 ஆங்கிலத்தில் செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 பாட்டு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியக்கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 பாடப் பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 இசைவிழா, 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 இசைவிழா, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 வாத்தியஇசை, 9-30 இசைவிழாஅஞ்சல்.

சாமுவேல் ஞாபகார்த்தகேடய

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வியாழன்
வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் டி. ரி. சாமுவேல் ஞாபகார்த்தக் கேடய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த 13 விளையாட்டுக் கழகங்கள் மோதுகின்றன. சில முடிவுகள் வருமாறு;—

வதிரி யங்டைமண்ட்ஸ்'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் தேவரையாளி பிளாஷ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மோதலில் வதிரி யங்டைமண்ட்ஸ் 4—0 கோல்களால் பிளாஷைத்தோற்கடித்தது. திரு. எஸ். கதிர்காமத்தம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

வல்வெட்டித்துறை உதய சூரியன் விளையாட்டுக் கழகத்திற்கும் கொற்றுவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வல்வை உதய சூரியன் 8—1 கோல்களால் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு திரு எஸ். சிவதயாபரம் மத்தியஸ்தம் வகித்தார்.

புத்தூர் வீனஸ் கோஷ்டியினருக்கும், வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் வீனஸ் 3—2 கோலால் வெற்றிபெற்றது. திரு எஸ். கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

வல்வெட்டித்துறைபுளூஸ் கோஷ்டியினருக்கும் வல்வெட்டித்துறை கெலியன்ஸ் கோஷ்டியினருக்கு மிடையே ஏற்பட்ட மோதலில் புளூஸ் கோஷ்டி 2—1 கோலால் வெற்றியீட்டியது. திரு. டி. எம். வேதாபரணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### கிரிக்கெட் சங்க உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க புது வருட உத்தியோகஸ்தர்கள் வருமாறு:-

தலைவர்: ஜீ அரசரத்தினம், உபதலைவர்கள்: வி. கே. கந்தையா, டாக்டர் ஜே சி. துரைசிங்கம், வண. பிரான்ஸிஸ் ஜோசெப், பி. ஜேசுதாசன், ஏ. சுப்பிரமணியம். செயலாளர்: கே. கிருஷ்ணன்; உபசெயலாளர்: சற். சிங்கராயர். 5 பேர் கொண்ட நிர்வாகக்கமிட்டி ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (நி)

### மீண்டும் உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பம்

சங்கானை, வியாழன்
பெருமழை காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட வலி-மேகு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி திரும்பவும் ஆரம்பமாகியுள்ளது.

நாவலர் விளையாட்டுக் கழகத்திற்கும் சண்டிலிப்பாய் கிறுஸ் கோப்பேஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் நாவலர் 13—1 கோல்களால் பெரும் வெற்றியீட்டியது. திரு. ரி. நடராசா மத்தியஸ்தம் வகித்தார்.

கீழ்ப்பிரிவில் தங்களுடன் மோதிய எல்லாக் கழகங்களையும் வெற்றியீட்டிவந்த நாவலர் கழகம் இறுதிக் கேடயத்தைத் தட்டிக் கொள்வதற்குக் கடும்போட்டியில் ஈடுபட்டுள்ளது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வான்
நல்ல நிலைமையிலுள்ள வொக்ஸ் வாக்கன் பிரயாணிகள் வான் [Private Passenger Van] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்- மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2588

நாவலர் வீதியிலிருக்கும் கோவிந்தபிள்ளைமோட்டார் வேர்க்ஸ் என்னும் தொழிற்சாலை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, இ. கோவிந்தபிள்ளை, 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 278. 2585

### வாடகைக்கு

வீடு:
சகல வசதிகளுடன் ஆஸ்பத்திரி வீதியில் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு இல. 239, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2001

### கல்வி

வகுப்புகள்
க. பொ. த. [சாதாரண/உயர்தர] பரீட்சைக்குரிய விஞ்ஞானம், கலை, வர்த்தக வகுப்புகள் 46 வருட வர்த்தக ஆசிரியராலும், அனுபவமுள்ள லண்டன், இலங்கை, இந்திய பட்டதாரிகளாலும் 1-1-68 தொடக்கம் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை/உடுப்பிட்டி. 2197


### பாதையிலிருந்து ரயில் விலகியது

காங்கேசன்துறை, வியாழன்
மாவிட்டபுரத்துக்கும் காங்கேசன்துறைக்கு மிடையில் எண்ணை ஏற்றிச் சென்ற ரயில் நேற்று மாலை 3-20 மணிக்குபாதை விட்டு விலகியது. இதனுல் மாலை 4-10 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து பளைக்குச் செல்லும் பிரயாணிகள் ரயில் தடைப்பட்டு நின்றது. காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு செல்லும் ரயிலும் இதனுல் தாமதித்தே சென்றது.

### பதவிஉயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் மாநகர சபையின் சோலைவரிப் பகுதியில் கடந்த 8 வருடமாகச் சேவை செய்த திரு. நா. சிதம்பரநாதர் ஜனவரி 4லிருந்து தோப்பூர் கிராம சபையின் செயலாளராகப் பதவிஉயர்வுபெற்றுச் செல்கிறுர் [நி.]


நத்தார் வெளியீடு!
திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

28-ம் திகதி முதல்

விஜிதா [ஹட்டன்]
மொரேர்ன் [பதுளை]

சுந்தரராஜன்
நாகேஷ்
முத்துராமன்
ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன்
நடிக்கும்

மேஜர் சந்திரகாந்த்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
மனோகர் - விஜயலட்சுமி
நடிக்க
வல்லவனுக்கு வல்லவன்

MANOHARA
JAFFNA
Daily at
4-30, 7-00 & 9-45 p.m.
Brett Halsey
in
ESPIONAGE IN LISBON
(Seeret Agent 077)

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Cliff Robertson
Marisa Mel
in
MASQUERADE
(Eastmen Color)

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர் வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் உணவு தானிய விநியோகம்

## வர்த்தகர் சங்கம் மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன் வட இலங்கை உணவு தானிய மொத்த வியாபாரிகள் இறக்குமதியாளர்கள் சங்கக்காரியதரிசி பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

வடஇலங்கை உணவு தானிய மொத்த வியாபாரிகள் இறக்குமதியாளர் சங்கம் யாழ்ப்பாணத்தில் 1966-ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆரம்பமாகி இதுகாலவரையும் பொது மக்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உப உணவுப்பொருட்களை கட்டுப் பாட்டு விலைக்கு 27 வியாபாரிகள் மூலம் பொதுசனங்களால் மெச்சும்படிவிநியோகம் செய்துவருகிறது.

இச்சங்கத்தில் 27 வியாபாரிகள். இவர்கள் எல்லோருக்கும் சமமாக பாரபட்சம் இல்லாமல் மிகவும் சிறந்த முறையில் பொருட்களைக் கொடுத்து அவர்கள் பொது சனங்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகித்து வருகிறார்கள். இனிமேலும் இச்சங்கம் இதேமாதிரி விநியோகம் செய்யஇருக்கிறது. இச்சங்கத்தில் பதவி வகிக்கும் முக்கிய அங்கத்தவர்கள் கௌரமாகவும், கண்ணியமாகவும், ஒருவித சலுகையும், சுயநலமும் இல்லாமலும், பாரபட்சம் காட்டாமலும் நடக்கிறார்கள். மேலும்இவ்வண்ணமே இயங்கும்.

இச்சங்கத்தில் இதுவரையும் ஒருவிதமான தவறுதலோ பாரபட்சமோ நடக்கவில்லை. இதில் சேர்ந்த அங்கத்தவர்கள் இதுவரையிலும் எவ்வித முறையீடு ஒருவருக்கும் செய்யவில்லை. ஒரு அங்கத்தவரும் சங்கத்தில் இருந்துவிலகவும் இல்லை. இச்சங்கத்தின் நோக்கம் உப உணவுப்பொருட்களை வரவழைத்து பொதுமக்களுக்கு தட்டுப்பாடுஇன்றிக் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்வதே.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் 12-12-67-ல் நடைபெற்றது. அப்போது சங்க உத்தியோகஸ்தரில் சில மாற்றங்கள் நடைபெற்றன. அன்று தொடங்கிச் சங்கம் முன்னையிலும் பார்க்க மிகவும் விசேஷமாக நடைபெறுகிறது.

ஒரு சில வெளியாரின் விஷமத்தனமே சென்ற 20-12-67-ல் வெளியிடப்பட்ட தவருன செய்தியாகும்.

# தீவுப்பகுதியில் மட்டும் ரூபா 15லட்சம் வெங்காயம் சேதம்

## நாற்று நடுகைக்கு ஏற்பாடு செய்ய எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் மழையும் அதனுல் ஏற்பட்ட வெள்ளத்தினுலும் தீவுப்பகுதிகளில் மட்டும் சுமார் பதினைந்து லட்சம் ரூபாய் பெறுமதியான வெங்காயம் அழுகி சேதமடைந்துவிட்டதாகவும், வெங்காயச் செய்கையிலீடுபட்ட விவசாயிகளுக்கு நடுகை வெங்காயச்செலவு, உரச்செலவு முதலியவைகளை வழங்குவதுடன் வெங்காயச்செய்கைக்குப் பதிலாக உடனடியாக மிளகாய் செய்கைபண்ணுவதற்குஉத்வியளிக்கப்படவேண்டுமென்றும் தீவுப்பகுடு எம். பி. திரு வி. நவரத்தினம் பிரதமர், உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா, மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தினுல் அழிந்து போன வெங்காயச்செய்கைக்குப் பதிலாக மீண்டும் அதே இடங்களில் வெங்காயம் செய்கைபண்ணுவது இப்போது பயன்தரமாட்டாதென்றும் மிளகாய்ச் செய்கைக்கு உதவியும்ஊக்கமுமளிப்பதே பயனுள்ளதென்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட வெங்காயம் செய்கைபண்ணிய விவசாயிகளுக்கு போதிய உதவியும் ஊக்கமும் உடனடியாக அளிக்கப்படாவிட்டால் இனி மீண்டும் வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பயிர்ச்செய்கைகளில் விவசாயிகளை ஈடுபடுத்துவது கஷ்டமென்றும் திரு. நவரத்தினம் தெரிவித்திருக்கிருர்.

நீண்டகாலமாகப் புகையிலை உற்பத்திசெய்து வந்த விவசாயிகளிடம் தாம் பெரிதும் பிரசாரம் செய்து வெங்காயச் செய்கையிலீடுபடுத்தியதாகவும் தீவுப்பகுதியில் மட்டும் இம்முறை ஐநூறு ஏக்கர் நிலத்தில்வெங்காயம் பயிரிடப்பட்டிருந்ததென்றும் வெங்காயத்தில் நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்யும்நிலை ஏற்பட்டிருந்ததென்றும் திரு. நவரத்தினம் கூறுகிருர்.

வேலணை கிழக்கு, புளியங்கூடல், மயிலப்புலம், சரவணை, வேணுக்குளம். பிட்டிதோட்டம், திட்டில், தணுவில், கரம்பன், மெலிஞ்சிமுனை, வாணிபன் தோட்டம் ஆகியபகுதிகளில் வெங்காயம் செய்கைபண்ணப்பட்டிருந்ததென்றும் வெள்ளத்தினுல் அழிவு ஏற்பட்ட இந்த இடங்களில் இன்னும் பத்துத்தினங்களுக்குள் மிளகாய்ச்செய்கை தொடங்கினுல்தான் பயன் கிடைக்குமென்றும் திரு. நவரத்தினம் தெரிவித்திருக்கிருர்.

# விதை நெல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம். வெள்ளி யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தினுல் நெற்பயிற் சேதமடைந்த விவசாயிகளுக்கு இலவச விதை நெல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மாதம் 150 ரூபாவிற்குட்பட்ட வருமானமுள்ள விவசாயிகளுக்கு நெற்பயிர்கள் முற்றாக சேதமடைந்திருந்தால் மீண்டும் பயிரிடுவதற்கு இலவச விதை நெல் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

# 5சினிமாநடிகர்கள்மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 20 கடந்த 5 ஆண்டுகளாக வருமானவரிக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்துள்ளனர் என்று 5 வடஇந்திய சினிமா நடிகர்கள்மீது இந்திய வருமானவரி இலாகா குற்றஞ்சாட்டியுள்ளது. அந்நடிகர்களின் பெயர்கள் வருமாறு:

தேவ் ஆனந்த. ராஜ்கபூர், ராஜேந்திரக்குமார், ஷம்மி கபூர், வகீதாரகுமான்.

# மூதூருக்கு புதிய பொலிசார்

மூதூர், வியாழன் மூதூர் பொலிஸ் நிலையத்துக்கு அடுத்த ஆண்டு முற்பகுதியில் புதிய பொலிசார் வருவரென அறியப்படுகிறது. இங்குள்ள 12 பொலிசார் வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# மூதூர்எம்.பியின் கோரிக்கை

மூதூர், வியாழன் 'இவ்வருடம் ஆசிரியகலாசாலையிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் மூதூர் பகுதியைச் சேர்ந்தவர்களை மூதூர் பகுதியில் காலியாகவுள்ள இடங்களுக்கே நியமிக்க நடவடிக்கை எடுங்கள்.'

இவ்வாறு மூதூர் இரண்டாவது எம்.பி. ஜனுப் அப்துல் மஜீத் கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

# 'பரீட்சை நிலையம் வேண்டும்'

மூதூர், வியாழன் திருகோணமலை கட்டுக்குளப்பகுதியில் பரீட்சை நிலையமொன்றை நிறுவித்தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். இப்பகுதியில் பரீட்சை நிலையம் ஒன்றில்லாததால் 28மைல் தூரத்திலுள்ள புமூட்டைக்கு ஜி.சி.ஈ மற்றும் பரீட்சைகளை எடுக்கச்செல்லவேண்டியுள்ளார்களென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தமிழ்.............

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

யார் முடிவுரையாகப் பேசுகையில், உலகமனைத்தையும் ஒன்ருகப் பாவிக்கும் மனிதாபிமானத்தை வளர்க்க துணை புரியும் இலக்கியப் பணியே சிறந்த பணி எனக் குறிப்பிட்டார்.

சிவபாதசுந்தரத்தின் நன்றியுரையுடன் மகாநாடுமுடிவடைந்தது,

''கதை இலக்கியத்தின் உறுப்புகள்'' என்பது பற்றிய கருத்தரங்கம் காலையில் நடைபெற்றது. சுகி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். கதை இலக்கியத்தின் உறுப்புகளாகவிருக்கும் பல்வேறு அம்சங்களைப் பற்றி அவர் தமது உரையில் குறிப்பிட்டார். ''கருப்பொருள்'' என்பது பற்றி எழில்முதல்வன் பேசுகையில், ஒரு நிகழ்ச்சியைக் காரண காரியத்தோடு எழுதுவதுதான் கதைக்குரிய கருப்பொருள் ஆகும் என்று கூறினுர். நா. பார்த்தசாரதி ''உருவம்'' என்பது பற்றிப் பேசுகையில், வாழ்க்கையில் உள்ள பாத்திரங்களைப் பிரதிபலித்தால்தான் கதையின் உருவம் செம்மையாக அமையும் என்று கூறினுர். ''பாத்திரப் படைப்பு'' என்பது பற்றிப் பேசிய சி. பாலசுப்பிரமணியன், [illegible] கள் நன்கு சித்தரிக்கப்பட வேண்டும் என்ருர்.

# "சமய வாழ்வே இலட்சிய வாழ்வு"

யாழ்ப்பாணம், வெள்ளி 'சமய வாழ்க்கையே உன்னத லட்சிய வாழ்க்கையாகும். அதனை நன்முறையில் அமைத்துக் கொள்வோமாயின் சமூகத்தில் அமைதியும், சுபீட்சமும்நிலவும் என்பது உறுதி. சமூக வாழ்வின் அத்திபாரமே சமய வாழ்வு எனலாம். இதனைச் சைவர்களாகிய நாம நன்கு உணரவேண்டும்'

இவ்வாறு யாழ்ப்பாணம் சைவசமய அபிவிருத்திக்கழகத் தலைவர் திரு. க. சொக்கலிங்கம்[சொக்கன்] கழகத்தின் சார்பில் நாயன்மார் கட்டு இராஜேஸ்வரி அம்மன் கோவிலில் நடந்தமணிவாசகர் விழாவில் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், 'எமது நெறிகளெல்லாம் சைவ லட்சியங்களாலேயே அமைந்தனவாகும். நல்லைநகர் நாவலர் துணிவோடு நடத்திய போராட்டங்களுக்கும் அவற்றின் வெற்றிகளுக்கும்அவர்சைவ சமயத்தை உணர்ந்து, அதன் குறிக்கோள்களை வாழ்க்கையிலே கலந்துகொண்டமை தான் காரணம்' என்ருர்.

விழா ஆரம்பம் மணிவாசகர் திருவுருவ ஊர்வலத்துடன் ஆரம்பமானது. விழாவில் தலைவர் உரையைத் தொடர்ந்துகூட்டுப்பிரார்த்தனையும், சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. [நி]

# விளையாட்டுக் கழக நிர்வாகிகள்

முல்லைதீவு, வியாழன் முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பில் 'வளர்பிறை விளையாட்டுக்கழகம்' என்ற பெயருடன் ஒரு விளையாட்டுக்கழகம்அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

நடப்புவருட உத்தியோகத்தர்சளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- திரு. வ. வே. செல்லத்துரை, உபதலைவர்- திரு. கா. கணபதிப்பிள்ளை, காரியதரிசி:- திரு. நா. ஜெகதீஸ்வரன், உப செயலாளர்:- திரு. கா. திருநாவுக்கரசு, தனுதிகாரி:- திரு. இ. மரியநாயகம்.

# ஐயாறன்

[2-ம் பக்க தொடர்ச்சி)

அவர்கள், நாவலர் பெருமான் இரண்டாவது பாலபாடத்தில் குறிப்பிட்டுள்ள நீதிவாக்கியங்களைத் திரட்டி மக்களுக்கு நல்லறிவைப் பரப்பும் நோக்கமாக. ஒரு சிறிய நூலாக அச்சிட்டு, இலவசமாக வழங்குகின்ருர் இரண்டாவது பாலபாடம் இங்குகிடைக்கவில்லை என்று தெரிகிறது. கிடைத்தாலும் அதைப்படித்து, அதிலுள்ள நீதிகளைப் படித்துத் தெரிந்துகொள்ளப் பலருக்கு அவகாசமிராது. இந்நிலையில் இந்த நூலைத் தயாரித்து இலவசமாக வழங்கியுள்ளது நல்ல புண்ணிய காரியமாகும். அவர் வாழ்க.

ஃ ஃ

ஊனுய் உயிரானுய் உடலானுய் உலகானுய்
வானுய் நிலனுனுய் கடலானுய் மலையானுய்
தேனுர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ
ரருட் டுறையுள்
ஆனுய் உனக்காளாய் இனி
அல்லேன் எனலாமே.

ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள்

[பூக்களின் தேன் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறை திருக்கோயிலின் கண் நீங்காது எழுந்தருளியிருப்பவனே! நீ உடலிடத்து நின்று பொருள்களை உணர்ந்து வருகின்ற உயிர்களாகியும் அவை நிற்கின்ற அவ்வுடல்களாகியும் உலகாகியும் வானுகியும், நிலமாகியும், கடலாகியும், மலையாகியும்நிக்கின்ருய், இப்பெற்றியனுகிய உனக்கு நான் முன்பே அடியவனுகி, இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ?

# ஏழைகளுக்கு கிட்டாத நெஸ்பிறே?

சாவகச்சேரி, வியாழன் சாவகச்சேரி ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் நேற்று நெஸ்பிறே வழங்கப்பட்டது. இதை அறிந்த நூற்றுக்கணக்கானேர் அங்கு திரண்டனர். ஆனுல் அங்கு ''முற்பணம் தந்தோர், பதியப்பட்டோர்'' என்ற பிரிவினையில் நெஸ்பிறே வழங்கப்பட்டது. இறுதியில் பல உத்தியோகத்தர், அதிகாரிகள், அங்கு கடமை புரிவோருக்கு அறிமுகமானேர் ஆகியோருக்கே வழங்கப்பட்டதாம். இதனுல் பல ஏழை மக்கள் நெஸ்பிறே வாங்கமுடியாது ஏமாற்றத்துடனும் ஆத்திரத்துடனும் அங்கிருந்து வீடுதிரும்பினர்.

# பிறப்பை மறைக்க முயன்றவருக்கு அபராதம்

சாவகச்சேரி, வியாழன் பளையை அடுத்துள்ள வண்ணன்கேணி என்ற இடத்தில் வசிக்கும் சிதம்பரி கைம்பெண் சின்னம்மா என்ற 6 பிள்ளைகளின் தாய் தாம் பெற்ற குழந்தையொன்றின் பிறப்பை மறைக்கத் தகாத முறையைக் கையாண்டாரென பளைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கை விசாரனை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா மேற்படி பெண்ணை குற்றவாளியாகக் கண்டு ரூபா 100 அபராதம் விதித்தார்.

# விலைக்கட்டுப்பாட்டை மீறியவருக்கு அபராதம்

புலோலி, வியாழன் மந்திகையில் தீப்பெட்டியை விலைக்கட்டுப்பாட்டை மீறி விற்றதாக வர்த்தகரொருவர் மீது குற்றஞ்சாட்டி பொலிஸார் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோட்டில் தொடர்ந்திருந்த வழக்கில் அந்நபருக்கு 100 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.


## 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' 1-1-68 இதழில், வழக்கம் போல் 1968-ம் வருட 'ஈழநாடு பஞ்சாங்கம்' இணைக்கப்பட்டிருக்கும்.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனை ஏஜெண்டுகள், 27-12-67க்கு முன்னதாக எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org